Rotary

# VAAGAI VAANI

# வாகை வாணி

Newsletter of District Governor
Rtn. R. RAJA GOVINDASAMY, RID 3000, India

Issue No 10 Diamond

April 2025



Large Scale saplings plantation by Rotary Club of Gandharvakottai at Pudunagar Upgraded Government Primary Health Centre.



Miyawaki Forest Development by Rotary Clubs of Madurai Innovators, Madurai Blossom, Madurai Central and Nataraj Oil Mills, Madurai at Kappalur Industrial Estate, Madurai.

# GOVERNOR'S MESSAGE



உலகளாவிய ரோட்டரி அமைப்பும், ஐக்கியநாடுகள் சுற்றுச்சூழல் அமைப்பும் (United National Environment Programme) இணைந்து நன்நீருக்கான சமுதாயச் செயல்பாடு (Community Action for Fresh Water) திட்டத்திற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. எனவே நீர்நிலைகளை மேம்படுத்துவதும் ஒரு முக்கியச் செயல்பாடாக உள்ளது.

நீர் வளம், உயிர் வளம், உலக வளம், சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும், மக்கள் நல வாழ்விற்கும், சுற்றுச் சூழல் தக்க வைப்பதற்கும் ஆதாரம் நீர்தான். எனவே, நீர் வளம் பெருக்குதல் நம் அனைவரின் கடமையாகும். அரசும், பொதுச் சேவை அமைப்புகளும் இதில் பெரும் முனைப்புடன் செயல்பட்டு வரும் இந்நிலையில் நமது ரோட்டரி சங்கங்கள் குளம், கண்மாய்களைத் தூர்வாரி, சீமைக் கருவேல மரங்களை அகற்றி, நீர் வழிகளைச் சரி செய்து மழை நீர், பாசன நீர் சேமிப்புக்கும், இந்நிலைகளைச் சுற்றி மரம் நட்டு ஊர்மக்கள் தொடர் பராமரிப்புக்கு வழங்கி வருகின்றனர்.

நீர் வீணாகாமல் சேமித்து, நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கும், விவசாயத்திற்குப் பயன்படுவதற்கும் ரோட்டரி சங்கங்கள் முன்வந்துள்ளன. நன்கு கற்றுத் தேர்ந்தவனிடம் இருக்கும் செல்வம் (வளம்) ஒரு ஊரிலுள்ள நீர் நிறைந்த ஊருணி போல் வளமானது, அவனது செல்வம் அனைவருக்கும் பயனளிக்கிறது என ஊருணியை உவமையாக வைத்து நீரின்றி அமையாது உலகு எனவும் உணர்த்துகிறார் வள்ளுவர்.

எந்த பிரதிபலனும் இல்லாமல் வானம் மழை தருகிறது. இதனை வள்ளுவர் "கைம்மாறு வேண்டா கடப்பாடு" என்கிறார். மழையினால் கிடைப்பது நீர். இந்த நீர் நிலத்தடியில் ஆழ்ந்து பரந்து இருப்பதனால், நமக்கு அதனைப் பயன்படுத்த முடிகிறது. தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும், மழைநீரைச் சேகரிப்பதும், தண்ணீர் வீணாகாமல் காப்பதும், நீர்நிலைகளில் கழிவுகள் சேராமல் காப்பதும் நமது கடமையாகும் (Individual Social Responsibility).

வணிக நோக்கில் சுத்திகரிக்கப்பட்ட நீர் விற்பனை பெருகி இருக்கும் இக்கால கட்டத்தில் வணிக நீர் விற்பனையாளர்களில் மிக அரிதாக சிலர் மழை நீரிலிருந்து கிடைக்கும் நீரை மட்டுமே பதப்படுத்துகிறார்கள். நிலத்தடி நீரை அவர்கள் விற்பனைக்காகப் பயன்படுத்துவதில்லை. என்னதான் "Free Trade" வாய்ப்பிருந்தாலும் "Fair Trade" அணுகுமுறையை நாம் பின்பற்றும்போது ரோட்டரியின் நான்கு வழிச்சோதனையின் ஒழுக்கமுடைமை நெறி வெளிப்படுகிறது.

ஏப்ரல் மாதம் ரோட்டரிக்குச் "சுற்றுச்சூழல்" மாதம். எனவேதான் மீண்டும் நீர்வள ஆதாரங்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறேன். நமது ரோட்டரி மாவட்டத்தின் தலையாய திட்டமான அதாவது, நீர் நிலை மேம்படுத்துதல் (Water body rejuvenation) ஐம்பதிற்கும் மேற்பட்ட சங்கங்கள் நிறைவேற்றியுள்ளன. மேலும் இருபது சங்கங்கள் இதனைச் செயல்படுத்தவுள்ளார்கள். நீர்நிலைகள் வற்றிப் போயுள்ள இந்தக் கோடைகாலத்தில் நீர் நிலைகளைத் தூர்வாரியும், சீமைக்கருவேல் மரங்களை அகற்றியும், கரையை வலுப்படுத்தியும், கரையோரத்தில் பனை விதைகள் மற்றும் மரக்கன்றுகள் வைத்தும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும், நமது அன்றாடத் தேவையான நீர் வளம் பெருகுவதற்கும் உதவிட வேண்டுகிறேன்.

**Rtn. R. RAJA GOVINDASAMY,**
District Governor

# தூங்காதே தம்பி தூங்காதே



எனக்குத் தெரிந்த ஒருவர் முந்தைய இரவு முழுவதும் பேருந்துப் பயணத்தில் தூங்க இயலாமல் போனதனால் விடியற் காலை வீடு வந்து சேர்ந்தவுடன் தூங்கினார். பிறகு குளித்து காலைச் சிற்றுண்டி முடித்து தூங்கினார். பிறகு மதிய உணவு முடித்து தூங்க ஆயத்தமானார். மாலைதான் குளித்து விட்டு அடுத்த வேலையைப் பார்க்க சென்றார். அன்று காலை எந்த வேலையையும் செய்யத் தயாராக இல்லை. எனக்குத் தெரிந்து இப்படிப் பலர் இரவு தூங்கவில்லை என்றால் மறுநாள் தூக்கத்தைத் தவிர எந்த வேலையையும் செய்ய மாட்டார்கள். தூங்கிய நேரம் போக மீத நேரம் இருந்தால் தான் வேறு வேலைகள் செய்ய முற்படுவார்கள். எந்த வேலையும் செய்ய முற்படாதபொழுது கைபேசியைப் பார்த்துக் கொண்டிருந்தால் கூட படுத்துக் கொண்டே தான் பார்ப்பார்கள்.

எனது கட்சிக்காரர் ஒருவர் கல்லூரி படிப்பிற்குப் பிறகு தொழிலில் ஈடுபட்ட காலத்திலிருந்து மதிய உணவுக்குப் பிறகு 2 மணி நேரம் தூக்கம் அவசியம் வேண்டும் என்பதனால் மதிய தூக்கத்தை எந்த காரணத்திற்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டார்.

எனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் வெகு துரிதமாக சரியாக நோயாளிகளின் நோய் என்ன என்பதை துல்லியமாக சரியாக கண்டு பிடித்துவிடுவார். ஆனால் தினமும் மதிய உணவிற்குப் பிறகு 3 மணி நேரத்திற்குத் தூங்கியாக வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார். நான் பணிபுரிந்த ஆடிட்டர்களில் ஒருவர் திரு. பெரி. தியாகராஜ். அவர் எங்களிடம் கூறும் பொழுது வெளியூரில் உள்ள கட்சிக்காரர்களின் நிறுவனக் கணக்குகளைத் தணிக்கை செய்ய வெளியூருக்குச் செல்ல ஆயத்தமாகும் பொழுது இரவில் பயணம் செய்துகாலை 10 மணிக்குக் கட்சிக்காரரின் அலுவலகத்தில் ஆஜராக வேண்டுமென அறிவுறுத்துவது வழக்கம். நான் சந்தித்த ஒரு வழக்குரைஞர் தனது மேஜைக்கு வந்த வேலைகளை தன்னால் மட்டுமே செய்ய முடியும் வேலைகளைத் தானாகவோ அல்லது அவரிடம் பணியாற்றும் இளைய வழக்குரைஞர்களிடம் கொடுத்தோ மேஜையைக் காலிசெய்து விட்டுத்தான் இரவில் அலுவலகத்தை மூடுவதை வழக்கமாக வைத்திருந்தார். எனது ஆடிட்டர் நண்பர் ஒருவர் இரவு எப்பொழுது தூங்கச் சென்றாலும் அதிகாலையில் வழக்கமாக அவர் எழுந்திருக்கும் நேரத்தில் எழுந்துவிடுவார். காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தினமும் இரவு 1 மணிக்கு தூங்கச் சென்று காலை 5 மணிக்கு எழுந்து விடுவார். இன்றைய பிரதமர் திரு. நரேந்திரமோடி 2024 நாடாளுமன்றப் பொது தேர்தலின் பொழுது அவரது கட்சியின் வேட்பாளர்களை தேர்வு செய்வதற்காக முதல் வேட்பாளர் பட்டியல் உருவாக்கும் பொழுது நடுநிசிக்கு பிறகு கட்சிதலைமை அலுவலகம் சென்று அதிகாலை 3.45 மணிக்கு வேலையை முடித்து வீடு சென்றார் என்று செய்தி. ஒவ்வொருவரின் ஞானமும் புத்தி கூர்மையும் புத்திசாலித்தனமும் எந்தெந்த இலட்சியங்களை நோக்கிபயணம் செய்ய வேண்டும் என்பதும் எந்த வேலைகளுக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும், எந்த வேலைகளை புறந்தள்ள வேண்டும் என்பனவற்றை தீர்மானிக்கின்றன.

**Rtn. SL. SETUMADAVA**
gml.ridistrict3000@gmail.com

## Thuraiyur Golden City Rotary Club's Mental Health Programme

எங்களின் துறையூர் கோல்டன் சிட்டி ரோட்டரி சங்கமும், எங்கள் சங்கத்தின் அறக்கட்டளையும் சேர்ந்து 2016 - 17 ஆம் ஆண்டு முதல் இணைந்து நடத்தும் மனநல மருத்துவ முகாம் கடந்த 106 மாதங்களாக (9 ஆண்டுகளாக) துறையூர் S.P.G நடுநிலைப் பள்ளியில் ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை இந்த மாதம் வரை தொடர்ந்து நடத்தி வருகின்றோம். Dr.S.R.Nirmal அவர்கள் சிறப்பான மருத்துவ ஆலோசனைகளை வழங்கிவருகிறார். இதுவரை 500-க்கும் மேற்பட்ட பயனாளிகள் தொடர்ந்து பயனடைந்து வருகின்றனர், பயனாளிகள் அனைவருக்கும் இலவசமாக மருத்துவ ஆலோசனைகளும், மருந்து மாத்திரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன, மேலும் மருத்துவ முகாமிற்கு வருகைதரும் பயணாளர்களுக்கு உணவும் தரப்பட்டு வருகிறது. தீபாவளி, பொங்கல் ஆகிய பண்டிகை தினங்களில் அனைவருக்கும் புதிய ஆடைகளும், வீட்டிற்கு தேவையான அத்தியாவசிய மளிகை பொருட்களும் குளிர்காலங்களில் அவர்களுக்கு போர்வை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகின்றோம், மருத்துவ சிகிச்சை பெற்று குணமான பயனாளிகளுக்கு வேலை வாய்ப்பினையும் பெற்றுத்தருகின்றோம். தொண்டு தொடர்வோம்.

**Rtn. R. A. DHAKSHNAMOORTHY**







## UPCOMING EVENTS






## என் ரோட்டரி பயணம்



பட்டய நாளான 18 ஜுன் 1985 அன்று, திருநகர் மதுரை ரோட்டரி குடும்பத்தில் பிறந்து, ரொட்டேரியனாக பெயர் சூட்டப்பட்ட 40 வயது ரோட்டரி இளைஞன் நான். கல்வியாளர்கள், பேராசிரியர்கள், தொழில்முனைவோர், நிர்வாக மேலாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், பட்டயக் கணக்காளர்கள் இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் என பல்வேறு வகைப்பாடுகளுக்கு மத்தியில் நான் வளர்க்கப்பட்டு, உருவானது என் நல்வாய்ப்பு.

என் வாழ்வில் இப்படிப்பட்ட கற்றறிந்த, பண்புமிக்க மற்றும் அடக்கமான சமுதாயத்துடன் இணைந்தது என் பாக்கியம் என்று நான் மிகவும் பரவசமடைந்தேன். எங்கள் சங்கத்தில் உள்ள நற்சூழலின் உணர்வு என்னை இதயத்துடனும் உள்ளத்துடனும் ரோட்டரியை முழுமனதாக ஏற்றுக்கொள்ள வைத்தது.

சங்கத்தலைவர் பொறுப்பு முடிந்து, மாவட்ட ஆளுநர்களால் அவர்களின் உட்குழுவில் பல்வேறுபதவிகளில் பணியாற்றுவதற்கு நான் அழைக்கப்பட்டேன். இந்தப்பயணத்தின் தொடர்ச்சியில் 'ரோட்டரியின் ஐந்து மார்க சேவை' விருதுடன் நான் அங்கீகரிக்கப்பட்டேன்.

மூன்று பல்கலைக்கழகங்களில் அறிவியல், சட்டம் மற்றும் உளவியல் படித்துள்ளேன். ரோட்டரி எனது நான்காவது பல்கலைக்கழகம் ஆகும். இப்பல்கலைக்கழகத்தில் சமூகசேவை, கலாச்சாரம், தலைமைத்துவம், கூட்டுறவு, தோழமை, உளவியல், தொண்டு, சமூகம், நட்பு, நெறிமுறை தரநிலைகள், பாலின சமத்துவம் மற்றும் எண்ணிலடங்காத தலைமைப்பண்புகள் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இங்கு எழுத்துத் தேர்வோ, வாய்வழித் தேர்வோ கிடையாது. தன்னை ஈடுபடுத்திக்கொள்வதன் மூலம் சக தலைவர்களிடமிருந்து எதிரொலிக்கும் சுயகற்றலையும் உத்வேகத்தையும் உள்வாங்கி கசடறக்கற்று நிற்கச் செய்கிறது. இங்கு நான் கற்றுக்கொண்டதை எனது குடும்பத்தினரின் சிறந்த புரிதலுக்காகவும், நெறிமுறைகளை எனது ரப்பர் தொழிலிலும் மற்றும் தலைவராக மதுரை மாவட்ட குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கம் (MADITSSIA) போன்ற பிற பொது அமைப்புகளிலும் சிறப்பாக செயல்படுத்த முடிந்தது.

வணிகத்தில் முதலீட்டின் மூலம் உறுதியான மற்றும் அளவிடக் கூடிய வருவாயைப் பெறமுடியும். ரோட்டரியில் தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்யும் சிறுமுதலீடு மூலம் கிடைத்தற்கரிய மனநிறைவு எனும் அருவமான பலனைப் பெறமுடியும்.

சமூகத்தில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் ஒவ்வொரு ரொட்டேரியனுக்கும் நான் கற்றுக்கொண்டது பொருந்தும் என்று நம்புகிறேன். வயதில் முக்கால் நூற்றாண்டைக் கடந்தவனாக நான் இருந்தாலும், ரோட்டரி சூழலை உள்ளிழுக்கும்போது புத்துணர்ச்சி பெறுகிறேன். ரோட்டரியைப் பற்றிய எனது அவதானிப்பு, 'அங்கத்தினர்கள் வரலாம், அங்கத்தினர்கள் போகலாம், ஆனால் நூறு அகவைகளைத் தாண்டி ரோட்டரி என்றென்றும் தொடர்கிறது'. ரோட்டரியில் தங்களின் பயணத்தைப் புரிந்துகொள்பவர்கள் தலைவர்களில் தலைவராக உயர்த்தப்படுவார்கள்.

ரோட்டரிக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளதால் புதியரோட்டரி உறுப்பினர்களுக்குத் தகவல் களஞ்சியமாகவும் ஏற்கனவே உள்ள உறுப்பினர்களுக்கு நினைவூட்டும் வகையிலும் 'ரோட்டரி 101 தகவல்கள்' (Rotary 101 information) என்ற கையேட்டை தமிழில் வெளியிட்டுள்ளேன்.

நான் ஒரு ரொட்டேரியனாக இருப்பதில் பெருமைப்படுவதால் தொடர்ந்து ரோட்டரியில் இருக்கிறேன், இருப்பேன். ரோட்டரி ஒரு நீண்ட நெடும்பயணம், அதில் பல பயணிகளை சந்தித்து நட்பு பாராட்டி அரிய பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். ரோட்டரியை அனுபவியுங்கள். பன்முகத்தில் பயன்பெறுங்கள்.

**Rtn. சே. அரவிந்த்**
முன்னாள் தலைவர், திருநகர் மதுரை ரோட்டரி சங்கம்

## Honouring 54 members



**Honouring 54 members who have put in more than 25 years of service in Rotary Club of Karur**

## Rotary Blossom-Mental Health Programme at Dindigul







திண்டுக்கல் மாவட்ட ரோட்டரி ப்ளாஸம் 04-05-2016 அன்று தொடங்கப்பட்டு கொரோனா பேரிடர் காலத்தின் போதும் இடைநில்லாது செயல்பட்டு 04-05-2025 அன்று தனது 9ம் ஆண்டு நிறைவை எட்டுகின்றது. மனநல மேம்பாட்டுப் பணியில் 10ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்க உள்ள இத்திட்டம் திண்டுக்கல், வத்தலகுண்டு மற்றும் ஆலமரத்துப்பட்டி ஆகிய ஊர்களில் சீரிய முயற்சியுடன் நன்கு செயல்பட்டு வருகின்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மனநல விழிப்புணர்வு பற்றி பள்ளி, கல்லூரிகள் மற்றும் 100 நாள் வேலைத்திட்ட பயனாளிகளுக்கும் ரோட்டரி ப்ளாஸம் பணியாளர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. 18,500 க்கும் மேற்பட்டோர் பயன்பெற்றுள்ளனர். திண்டுக்கல் மையம் தனது 9 ஆம் ஆண்டு நிறைவின் போது 315வது மருத்துவ முகாமை நிறைவு செய்யும். தொடர் சிகிச்சையில் 190 பேர் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தில் மனநல மருத்துவர் த.பாலகுரு அவர்களின் சீரிய தலைமையில் பிஸியோதெரபிஸ்ட், செவிலியர், சிறப்புப் பயிற்சியாளர், களப்பணியாளர்கள், மனநல நிர்வாக மேலாளர், உட்பட 10 நபர்கள் பணியாற்றி வருகின்றனர். வாழ்வாதார பயிற்சி திட்டத்தின் மூலம் 45 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

வாழ்வாதார பயிற்சி மையத்தில் பயனாளிகளின் பெற்றோர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பயிற்சி பெற்ற தையல் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு இலவச தையல் பயிற்சி நடத்தப்படுகிறது. 20-10-2022 அன்று நமது மாவட்ட ஆளுநர் Rtn.R.ராஜா கோவிந்தசாமி அவர்களது முயற்சியால் தையல் இயந்திரங்கள் கிடைக்கப் பெற்று தையல் பயிற்சி வகுப்பு ஆளுநர் அவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு 30-க்கும் மேற்பட்டோர் பயன் பெற்றுள்ளனர்.

இதுதவிர வயர் கூடை பின்னுதல், மூலிகை மாஸ்க், திரவ சோப், பாத்திரம் துலக்கும் திரவ சோப், ஃப்ளோர் கிளீனர், நறுமண பினாயில், பினாயில் போன்ற பொருட்கள்; தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட அனைத்து பொருட்களும் மதுரையில் நடைபெற்ற வாகை மாநாட்டில் ஸ்டால் அமைத்து விற்பனைக்கு வைக்கப்பட்டது.

திண்டுக்கல் மையத்தின் சிறப்புகள் :

- மருத்துவ முகாமிற்கு பின் தொடர் கண்காணிப்பு
- மனநல மருத்துவரின் நேரடி ஆலோசனை
- சிகிச்சை பெறுவோர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருடன் 6 மாதத்திற்கொருமுறை இன்பச் சுற்றுலா அழைத்து செல்லுதல்
- பிறந்தநாள் போன்ற நிகழ்வுகள் கேக் வெட்டி, நினைவுப்பரிசு வழங்கி உற்சாக மூட்டுதல்.
- வாரம் இருமுறை தானிய வகைகள் நன்கு வேகவைத்து வழங்குதல்.
- தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை காலங்களில் அனைவருக்கும் புத்தாடை, இனிப்பு வழங்கப்படுகின்றது.
- அனைத்து தேசிய தினங்களும் தவறாமல் அனுசரிக்கப்பட்டு மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்றது
- மனநல சிகிச்சை என்பது சற்று சிரமமான தொடர் கண்காணிப்பு, பொருட்செலவு மிக்கது. இப்பணியில் ரோட்டரி நிர்வாகிகள் மற்றும் மருத்துவக் குழுவினர், சிறந்த பணியாளர்கள் தங்களை அர்பணித்து கொண்டு செயலாற்றி வருகின்றனர்.
- நமது நோக்கம் சகமனிதர்களின் மனநலம் காப்பதே! தாங்களும் இப்பணியில் பங்கேற்க விரும்பினால் விசேச தினங்களில் உதவ விரும்பினால் தொடர்பு கொள்க!

## Rtn. K.N. Jayaraman (Rotary Club of Perambalur)

Rotary Club of Perambalur was chartered on 6th May, 1972. My father K. Narayanasamy and myself K. N.Jayaraman joined the club as charter members. It was a unique privilege for father and son to join together. Now I am the only charter member continuously active for the past 53 years.

Our club has a building of its own. I am very happy to say that the Rotary blood runs in my family. My wife Malliga was the President of Perambalur Pearls Rotary Club, not in existence now. Now my wife Malliga, my daughter in law Saranya Karthik are members of Perambalur Aura Rotary Club newly formed last year. My grand daughter Thithisha is a Rotaractor.



My Co-brother Damodaran (Dindigul Rotary Club) is Past District Governor and my brother-in-law late M. Elangovan is also a Past District Governor. To my credit I have donated blood 102 times. Our whole family loves Rotary and my son DGE J. Karthik is raring to make dreams come true in 2025-'26. Let us always unite for good.

## தெற்காசிய சர்வதேச மாநாடு

ரோட்டரி, தெற்காசிய அமைதி மாநாடு 23 மார்ச் 2025 அன்று பெங்களூரில் டாக்டர் பாபு ஜெகஜீவன்ராம் பவனில் நடைபெற்றது. நமது ரோட்டரி மாவட்டம் 3000 சார்பில் கரூர் ரோட்டரி கிளப் சுரேஷ் மாறன் ஆகிய நான் கலந்து கொண்டேன். ரோட்டரி கவர்னர் என்.எஸ்.மகாதேவ் பிரசாத் தலைமையில் (ரோட்டரி மாவட்டம் 3192) இந்த மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டில் சுமார் ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

மத்திய அமைச்சர் திரு எச்.டி.குமாரசாமி மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த பல அமைச்சர்கள் உரையாற்றியதன் மூலம் இந்த மாநாடு தொடங்கப்பட்டது. பூட்டான், நேபாளம், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா உள்ளிட்ட தெற்காசிய பிராந்திய நாடுகளின் ஆறு தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டன. பல்வேறு நாடுகளின் கலை, நடனம் மற்றும் இசை வடிவிலான கலாச்சார நிகழ்வுகளால் இந்த நிகழ்வு நிரம்பியது.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பிரதிநிதியாக ரொட்டேரியன் பிரையன் ரஷ் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் ரொட்டேரியன்கள் பலர் பேசினர். இந்த நிகழ்வு உலக அமைதி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

மூன்று முறை கிராமி விருது வென்றவரும், பத்மஶ்ரீ விருது வென்றவருமான ரிஷிகேஷ் இந்த நிகழ்ச்சியின் இசைத் தூதராக கௌரவிக்கப்பட்டார். பாராகிளைடிங் பள்ளியை நடத்தி வரும் கேப்டன் அவி மாலிக் மற்றும் இதயநோய் நிபுணரும், Centre for Chronic Disease Control இயக்குநருமான துரைராஜ் பிரபாகரன் இருவரும் அவர்களின் வேலைக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான உறவு பற்றி பேசினர்.

கல்வியாளரும், தொழிலதிபரும், ஊக்கமளிக்கும் பேச்சாளருமான ஐஸ்வர்யா ஹெக்டே உரையாற்றினார். சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கும் மனித மோதல்களுக்கும் இடையிலான உறவு குறித்து எஸ்ராக் (ESRAG) முன்னாள் தலைவர் Rtn. யாசிர் அட்டாசிக் பேசினார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர் சரத் கோட்டகாமா சுற்றுச்சூழல் அறிவியல் கல்வி குறித்து எழுச்சியூட்டும் உரையை நிகழ்த்தினார்.

பின்னர் யாசர் அட்டாசிக், அருண் வாடி, மீனாட்சி வெங்கட்ராமன் ஆகியோரின் குழு விவாதம் நடைபெற்றது. பெங்களூரில் உள்ள சிரந்தனா அறக்கட்டளையைச் சேர்ந்த சிறப்புக் குழந்தைகள் முயல் மற்றும் வலிமைமிக்க சிங்கத்தின் கதையைப் பயன்படுத்தி DEI (பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம்) என்ற கருத்தை விளக்க ஒரு அழகான நிகழ்ச்சியை நிகழ்த்தினர்.

அகமதாபாத்தைச் சேர்ந்த 13 வயது மாணவர் கியான், சுற்றுச்சூழல் மூலம் உலக அமைதி ஏற்படுத்துவது எப்படி என்பது குறித்து ஒரு சிறந்த சிறிய உரையை வழங்கினார். பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸைச் சேர்ந்தபள்ளி மாணவி ITR. குர்சிதக் கவுர் அவர்களையும் நான் சந்திக்க நேர்ந்தது. அவர் மாநாட்டில் சுற்றுச்சூழல் குறித்து ஸ்டால் வைத்திருந்தார். பல்வேறு முன்மாதிரியான தலைவர்களுக்கும், பிரபல ரொட்டேரியன்களுக்கும் விருதுகளை வழங்கிய பின் நிகழ்வு நிறைவுற்றது.

**Rtn. Dr. Suresh Maran**
Rotary Club of Karur




**My Participation**




**Conference Recognition**



**Myself with Interactor from Punjab Gursidak Kaur**

## திருச்சி மத்திய சிறையில் நூல்கள் வழங்கல்



திருச்சிராப்பள்ளி ஃபினிக்ஸ் ரோட்டரி சங்கம் திருச்சி மத்திய சிறையில் இயங்கிவரும் சிறைத்துறை பயிற்சி மையத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் பெறுமான புத்தகங்கள் வழங்கியது. இதில் Rtn. AKS. Dr. K. சீனிவாசன் வழங்கிய 1 லட்சம் பெறுமான புத்தகங்களும் அடங்கும். திருச்சி சரக சிறைத்துறைத் துணைத்தலைவர் திரு. பழனி, திருச்சி மத்தியசிறைக் கண்காணிப்பாளர் ருக்மணி பிரியதர்ஷினி, ரோட்டரி மாவட்டம் 3000-த்தின் ஆளுநர் ராஜா கோவிந்தசாமி, ரோட்டரி மாவட்ட உதவி ஆளுநர் செல்வகுமார், சங்கத்தலைவர் பாலசுப்ரமணியன், செயலாளர் பிரகாஷ் அருள்ராஜ், திட்டத்தலைவர் முத்துக்குமார், மற்றும் முன்னாள் தலைவர்கள் பங்கேற்றனர். சிறை வளாகத்தில் மரக்கன்றுகள் நடுவதற்கு உதவுவதாக Rtn.AKS. Dr. K. சீனிவாசன் உறுதியளித்தார். சிறை இசைக்குழுவினர் பாடல்கள் பாடி அனைவரையும் மகிழ்வித்தனர். திருச்சி சிறைத்துறையில் பயின்றுவரும் பயிற்சிக் காவலர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

## Rotaract Activities



PSNA Men's Physique Competition was conducted by Rotaract Club of PSNACET.



Rotaract Club of YARA Tiruchirapalli conducted One Day RYLA for members in District 3000.



Rotaract Club of Dindigul Rockfort conducted District Rotaract RYLA for Rotaractors.



Rotaract Club of SACS MAVMM conducted District Rotaract RYLA for Rotaractors



Rotaract Clubs of Mother Theresa University and Govt Arts College for Women, Kodaikanal held placards and sloganeering near the lake highlighting Women's Rights & Environmental Awareness.


## மதுரை மத்திய சிறையில் மருத்துவ முகாம்



மதுரை மேற்கு ரோட்டரி சங்கம், க்ருபா டிரஸ்ட், சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள்துறை, மதுரை இணைந்து AVSS மருத்துவமனை, அகர்வால் கண் மருத்துவமனை, கிருஷ்ணா ஐகேர் துணையுடன் மதுரை மத்திய சிறைச்சாலையில் பொது, எலும்பு முறிவு, தோல் மற்றும் கண் மருத்துவ முகாம் நடத்தியது. திரு.B.முருகேசன், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை துணைத்தலைவர், மதுரை சரகம், மதுரை, அவர்கள் தலைமையில், திரு.மு.சதீஷ்குமார், சிறை கண்காணிப்பாளர், மத்தியசிறை, மதுரை அவர்கள் முன்னிலையில் ரோட்டரி மாவட்டம் 3000 ஆளுநர் Rtn ராஜாகோவிந்தசாமி மற்றும் மாவட்ட முதல்பெண்மணி Rtn ஆஷா ராஜாகோவிந்தசாமி அவர்கள் பங்கேற்பில் இனிதே நடைபெற்றது. மதுரை வெஸ்ட் ரோட்டரி சங்கத் தலைவர் Rtn. தனராஜன், செயலர் Rtn சுமதி ஞானகுகன், முன்னாள் தலைவர் Rtn ராஜி தனசேகரன், மாவட்ட செயலர் Rtn. சுந்தரவேல், Rtn சரவணகுமார், Rtn Dr. மைதிலி பாண்டியன் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். மேலும் சிறை நூலகத்திற்கு புத்தகங்கள் அளிக்கப்பட்டன.

## Rotary International Awards for 2024-'25



PDG. **Rtn. Y. Kumanan**
Rotary Membership Coordinator (2025-2028)
for Zone 5



PDG. **Rtn. SAM BABU**
Represented our District at the
Council on Legislation held at USA



Rtn. **Dr. C. Selvaraj**
(RC of Periyakulam)
Polio Regional Service Award for 2024-'25



Rtn. **R.A. Dhakshnamoothy**
(RC of Thuraiyur Golden City)
Polio Regional Service Award for 2024-'25



Prof. **Dr. C. Vanniarajan**
(Dean, Trichy Agricultural College)
Excellence Award for Service to Humanity



PDG. **Rtn. P. Dhamodharan**
Assistant Endowment & Major Gifts Chair for
2025-'26 for RID 3000 & 3220



PDG. **Rtn. Dr. Zameer Pasha**
was the Chief Guest at the Graduation Ceremony
at Sri Ramachandra Institute of Higher Education
& Research, Chennai



# Governor's Official Visit




Rotary Club of Tiruchirapalli Shakthi 03-04-2025



Rotary Club of Mimisal Kings 03-04-2025



Rotary Club of Ariyalur 05-04-2025



Rotary Club of Karur Young Gen 08-04-2025



Rotary Club of Madurai Kingscity 09-04-2025



Rotary Club of Madurai Royal 11-04-2025




Rotary Club of Madurai Innovators 12-04-2025



Rotary Club of Aranthangi 13-04-2025



Rotary Club of Pudukkottai Midtown 13-04-2025



Rotary Club of Pudukkottai Palace City 13-04-2025

## Governor's Official Visit


Rotary Club of Gandarvakottai 13-04-2025


Rotary Club of Gandharvakottai Bharath 13-04-2025


Rotary Club of Pon Pudupatti 14-04-2025


Rotary Club of Pudukkottai 14-04-2025


Rotary Club of Trichy Gems Innovators 15-04-2025


Rotary Club of Tiruchirapalli Phoenix 15-04-2025


Rotary Club of Chinnamanur Green City 20-04-2025


Rotary Club of Gudalur Garden City 20-04-2025


Rotary Club of Cumbum Green Valley 20-04-2025


Rotary Club of Perambalur Aura 23-04-2025

## Governor's Official Visit



Rotary Club of Perambalur Cotton City 23-04-2025



Rotary Club of Perambalur and Perambalur Kings 23-04-2025



Rotary Club of Perambalur New Gen 23-04-2025



Pudukkottai King Town 25-04-2025



Rotary Club of Pudukkottai Crown City 25-04-2025



Rotary Club of Karambakudi City 25-04-2025



Rotary Club of Trichy DC Pride & Trichy Diamond City Elite 25-04-2025



Rotary Club of Tiruchy Central 25-04-2025



Rotary Club of Vathalagundu and Dindigul Aram 26-04-2025



Rotary Club of Trichy Diamond City Queens 26-04-2025

## Governor's Official Visit



Rotary Club of Manaparai Stars 26-04-2025



Rotary Club of Trichy Clouds 26-04-2025




Rotary Club of Tiruchirapalli Metro 26-04-2025




Rotary Club of Tiruchirapalli Midtown 29-04-2025

## PDG தீனச்சந்திரனின் தீரச் செயல்கள்

மாலை மலர் மதுரை 26—4—2025 ★★★



மதுரை மெட்ரோபொலிஸ் ரோட்டரி சங்கம் சார்பாக மதுரை ரியோ மருத்துவமனையில் சுமார் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள தாய்ப்பால் சேமிப்பு வங்கியினை கலெக்டர் சங்கீதா தொடங்கி வைத்த போது எடுத்த படம். அருகில் ரியோ மருத்துவமனை சேர்மன் டாக்டர் சரவணன், முன்னாள் ஆளுநர்கள் தீனச்சந்திரன் ஆர்.வி.கண்ணன், துணை ஆளுநர் கலைராஜன், சங்கத் தலைவர் பாண்டித்துரை, செயலாளர் வாசன் ஆகியோர் உள்ளனர்.

மதுரையில் ரோட்டரி சார்பில்

### ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் தாய்ப்பால் சேமிப்பு வங்கி

கலெக்டர் சங்கீதா தொடங்கி வைத்தார்

மதுரை, ஏப்.26—

மதுரையில் ரோட்டரி கிளப் இன்டர்நேஷனல் மற்றும் தேவி கிராப் சயின்ஸ் நிதி பங்களிப்புடன் ரோட்டரி கிளப் ஆப் மதுரை மெட்ரோபொலிஸ் சார்பாக மதுரை ரியோ மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையில் சுமார் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் நவீன கருவிகளுடன் கூடிய தாய்ப்பால் சேமிப்பு வங்கி திறக்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தினை கலெக்டர் சங்கீதா திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில், இன்றைய சூழலில் மக்களுக்கு மிகவும் அவசியமான மற்றும் உன்னதமான திட்டம். இந்த தாய்ப்பால் சேமிப்பு வங்கி எண்ணற்ற உடல் நலிவுற்ற குழந்தைகளுக்கு பயனளிக்கும். பொது மக்களுக்கு இந்த மையத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி தாய்ப்பால் தானம் வழங்குபவர்களை ஊக்குவிக்க வேண்டும். ஒரு தாயாக அனுபவரீதியாக என்னால் இதை உணர முடியும். தாய்ப்பால் சேமிப்பு வங்கி செயல்படுவதற்கு ரியோ மருத்துவமனையை தேர்வு செய்த ரோட்டரி நிர்வாகிகளையும் பாராட்டுகிறேன் என்றார்.

ரோட்டரி கிளப் ஆப் மதுரை மெட்ரோபொலிஸ் தலைவர் பாண்டித்துரை பேசும்போது, இது ஒரு புரட்சிகரமான முன்னெடுப்பு. தாய்ப்பால் தேவைப்படும் குழந்தைகளுக்கும் தாய்ப்பால் தானம் செய்ய விரும்புவர்களுக்கும் இணைப்பு பாலமாக இந்த மையம் செயல்படும் என்றார்.

இந்நிகழ்வில் மையம் அமைய இன்றியமையாத பங்களிப்பு செய்த தேவி கிராப் சயின்ஸ் சேர்மன் ரோட்டரி முன்னாள் ஆளுநர் தீனச்சந்திரன், ரியோ மருத்துவமனை சேர்மன் டாக்டர் சரவணன், துணை ஆளுநர் கலைராஜன் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

மண்டலஒருங்கிணைப்பாளர்கள் ஸ்ரீனிவாசன், சுரேந்திரன், உதவி ஆளுநர்கள் பழனி நாதன், அருள்சங்கர் உட்பட பலர் பங்கேற்றனர். முடிவில் செயலாளர் டாக்டர் வாசன் நன்றி கூறினார்.



Joint Inauguration of Devi Crop Science - Rotary Sports Complex by DG Raja Govindasamy, IPDG Anandtha Jothi and CSR Donor PDG Theenachandran under Rotary Foundation &CSR India Grants at Batlagundu Spearheaded by Rotary Club of Batlagundu New Gen.



Devi Crop Science - Rotary Sports Complex in Full View.



CSR Donor PDG Rtn. Theenachandran Felicitates.

# Vaagai Activities



கந்தர்வகோட்டை ரோட்டரி சங்கம் விவசாயிகளுக்கு மருந்து தெளிப்பான் வழங்கியது.



உசிலம்பட்டி ரோட்டரி சங்கம் வறிய தொழுநோயாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கியது



கறம்பக்குடி சிட்டி ரோட்டரி சங்கம் கறம்பக்குடி காவல் நிலையத்திற்கு சாலையோர தடுப்புப்பலகை வழங்கியது.



பொன்புதுப்பட்டி ரோட்டரிசங்கம் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம் மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனை உதவியுடன் சிறப்பு பொது மருத்துவ முகாம் நடத்தியது.



மதுரை மெட்ரோ ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம் தனது RCC மேற்பார்வையில் நடத்திவரும் பயிலகம் மூலம் TNPSC தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் மூர்த்தி அவர்கள் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்.



திண்டுக்கல் மேற்கு ரோட்டரி சங்கம் தென்னக பார்வையற்றோர் நலச்சங்கத்திற்கு கம்பிவேலி அமைத்துக் கொடுத்தது.



திண்டுக்கல் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் திண்டுக்கல் ரோட்டரி சங்கம் எவரும் மனமுவந்து அளிக்கும் பயனுள்ள பொருட்களை வறியமக்கள் எடுத்துக் கொள்ளும் வகையில் அன்புப் பெட்டகம் அமைத்துள்ளது.




தூய்மை, சுற்றுச்சூழல் பாதுகாத்தல் குறித்து அறந்தை அறம். ரோட்டரி சங்கம் ஊர்ச்சுவர்களில் எழுதிவைத்த சுவர் விளம்பரம்



திருமங்கலம் ரோட்டரி சங்கத்தின் கிளேனிஸ் மருத்துவமனை ரோட்டராக்ட் சங்க உறுப்பினர்களுக்கு ரோட்டரி – ரோட்டராக்ட் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது



மதுரை வடக்கு ரோட்டரி சங்கம் அண்ணாநகர் உழவர்சந்தையில் கண்பரிசோதனை முகாம் நடத்தி இலவச கண்ணாடிகள் வழங்கியது.



ரோட்டரி மாவட்டம் 3203 திருப்பூர் அவிநாசி ரோட்டரி சங்கம் சார்பில் Rtn. விசித்ரா செந்தில்குமார் அவர்கள் சேகரித்த 3 லிட்டர் தாய்ப்பால் ரோட்டரி அறக்கட்டளை நிதி மூலம் மணப்பாறை அரசு தலைமை மருத்துவமனை தாய்ப்பால் வங்கிக்கு தானமாக வழங்கப்பட்டது.



ஊர் திருவிழாவை முன்னிட்டு அறந்தாங்கி தி ஃபோர்ட் சிட்டி நடத்திய நீர் மோர் பந்தல்.

## Vaagai Activities



சின்னமனூர் ரோட்டரி சங்க உதவியில் கட்டப்பட்ட அறம் ஆண்டு மாவட்ட சுகாதார வளாகம் ஓடைப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் திறக்கப்பட்டது.



கரூர் யங் ஜென் ரோட்டரி சங்கம் 3 கிரிக்கெட் போட்டிகள் நடத்தி புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டியது.



திருச்சி DC. Pride ரோட்டரி சங்கம் நடத்திய 100 நாள் இணையவழி பயிற்சி வகுப்பின் நிறைவு விழா.



திருச்சி மிட்டவுன் ரோட்டரி சங்கம் நடத்தும் மாதாந்திர செயற்கை உறுப்பு தான முகாம்



திருச்சி டைமன்ட் சிட்டி எலைட் ரோட்டரி சங்கம் செய்ன்ட் ஜோசப் சர்ச்சுடன் இணைந்து இரத்த தான முகாம் நடத்தியது.



திருச்சிராப்பள்ளி வடக்கு ரோட்டரி சங்கம் அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து கண் பரிசோதனை முகாம் நடத்தியது.

## Flag Exchange



திருச்சி டைமன்ட் சிட்டி ரோட்டரி சங்க உறுப்பினர் Rtn. மகேஸ்வரன் இத்தாலியின் மிலானோ ரோட்டரி சங்கத்தலைவர் தேர்வுடன் சங்கக் கொடி பரிமாற்றம் செய்து கொண்டார்.



திருச்சி DC. Queens ரோட்டரி சங்க உறுப்பினர் Rtn. ரஹ்மத், துபாய் மிட்டவுன் ரோட்டரி சங்கத்துடன் சங்கக் கொடி பரிமாற்றம் செய்து கொண்டார்.



மதுரை ஜகான்ஸ் ரோட்டரி சங்க உறுப்பினர் Rtn. சசி ஃபோம்ரா அமெரிக்காவின் சாண்டியாகோ நகரில் 4 சங்கங்களுடன் சங்கக் கொடி பரிமாற்றம் செய்து கொண்டார்.

## Special RYLA

Rotary Club of Tiruchirapalli Diamond City (RI Dist 3000) in association with Rotary Club of Vridhachalam (RI Dist 2981) conducted INTER DISTRICT SPECIAL RYLA for 75 special children on 28th of February 2025. The special children from Trichy along with one parent / caretaker were taken on a joyful ride to meet their peers at SRI RISHAB JAIN SPECIAL SCHOOL - Vridhachalam, for a fun-filled, first of its kind experience. Experts from Chennai & Pondicherry handled 8 Sessions.





## Yadhumanaval

Yadhumanaval is a girl / women empowerment programme sponsored by RID 3212, Rotary Club of Virudhunagar and Idhayam Group of Companies with the Paramount facilitator Prof. Dr. Jayanthashri Balakrishnan. Our Vaagai year began with first three of her programmes on 1st, 2nd, 3rd, July at Madurai, Kodaikanal and Dindigul. Subsequently it was done at Tiruchirappalli. In April it was held at Theni, Pudukkottai and Manapparai with Rotary Clubs of Pudukkottai, Pudukkottai Central, Pudukkottai Maharani, Theni and Manapparai. The Coordinator Rtn. Vijayakumari Dharmar follows up with clubs and with the facilitator for creating the right impact in every event. So far 109 programmes have been held in Tamil Nadu and Sri Lanka.



At Bharathi Group of Institutions, Pudukkottai.



At Athavan Arts College, Alathur, Manapparai.




At Nadar Saraswathi College, Theni.

## TRF-க்கான APF அல்லது EPF

**(ரோட்டரி அறக்கட்டளைக்கான வருடாந்திரத்திட்ட நிதி அல்லது போலியோ ஒழிப்பு நிதி)**

1. ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 5 அல்லது 10 அல்லது 25 அமெரிக்க டாலர்களை செலுத்துகிறார்கள். RID 3000 இன் அனைத்து உறுப்பினர்களும் ரோட்டரி அறக்கட்டளைக்கு செலுத்தினால், வருடாந்திர திட்ட நிதிக்குச் செலுத்தும் சங்கமாக / மாவட்டமாக அங்கீகாரம் பெறலாம்.
2. போலியோ தொற்றுநோய் முற்றிலும் ஒழியும் வரை போலியோ நிதிக்கு ஆண்டுதோறும் 100 அமெரிக்க டாலர்களை செலுத்துவேன் என உறுதியளித்து போலியோ பிளஸ் சொசைட்டி உறுப்பினராகலாம். (Polio Plus Society)
3. போலியோ ஒழிப்பு நிதிக்கு ஒரு லட்சம் ரூபாய் அல்லது 1163 அமெரிக்க டாலர்களைச் செலுத்தி போலியோ ஒழிப்பு கூட்டாளியாகுங்கள். (End Polio Fellow)
4. வருடாந்திர திட்ட நிதிக்கு 1000 அமெரிக்க டாலர்களைச் செலுத்தி பால் ஹாரிஸ் கூட்டாளியாகுங்கள். (Paul Harris Fellow)
5. ஒவ்வொரு வருடமும் ரோட்டரி அறக்கட்டளைக்கு 1000 அமெரிக்க டாலர்கள் செலுத்தி பால் ஹாரிஸ் சங்க உறுப்பினராகுங்கள். (Paul Harris Society)
6. 500 அமெரிக்க டாலர்கள் (ரூ. 43,500) செலுத்தி 500 டாலர்களுக்கு சமமான 500 புள்ளிகளை மாவட்ட ஆளுநர் மூலம் பெற்று பால் ஹாரிஸ் ஃபெல்லோவாகுங்கள் (Paul Harris Fellow) அல்லது நீங்கள் ஏற்கனவே PHF ஆக இருந்தால் பன்முறை பால் ஹாரிஸ் கூட்டாளி அங்கீகாரம் பெறுங்கள். (Multiple Paul Harris Fellow)
7. 10,000 அமெரிக்க டாலர்களைச் செலுத்தி பெருங்கொடையாளராகுங்கள் (Major Donor), அதன் பிறகு 25,000, 50,000, 75,000, 100,000 என்ற பெருங்கொடையாளர் நிலை வரிசைகளில் உயர்ந்து மொத்தம் 2,50,000 வரை அளித்து ஆர்ச் க்ளம்ப் சொசைட்டியில் (Arch Klumph Society) உறுப்பினராக உயர்ந்து மகா நன்கொடையாளராகலாம்.
8. நீங்கள் ஒரு பெருங்கொடையாளராக 10,000 அமெரிக்க டாலர்களை செலுத்தும்போது உங்கள் மனைவியும் ஒரு பெருங்கொடையாளராக அங்கீகரிக்கப்படுவார். உங்கள் மனைவி அளித்துள்ள நன்கொடையையும் சேர்த்து பெருங்கொடையாளர் (Major Donor) அந்தஸ்தைப் பெறலாம்.
9. நினைவில் கொள்ளுங்கள், சம்பாதிப்பதைத் தொடர்ந்து சேமிப்பும், சேமிப்பைத் தொடர்ந்து கொடுப்பதும் தொடர் நிகழ்வுகளாகும். நன்கொடை கொடுப்பது செலவழிப்பதற்கான மற்றொரு வழியாகும். எனவே சம்பாதித்தல், சேமித்தல் மற்றும் கொடுத்தல் ஆகியவை மனிதகுலத்தின் மூன்று முக்கிய கடமைகளாகும்.
10. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக உலகில் நன்மை செய்து வரும் ரோட்டரி அறக்கட்டளைக்கு நன்கொடை அளியுங்கள். ரோட்டரி அறக்கட்டளைக்கு நாம் தரும் நன்கொடை எதிர்காலத்திற்கான முதலீடாகும்.

APRIL IS




# Protecting Our Planet

## Starts with Simple, Mindful Actions

*Let's grow green, inspire change, and create a sustainable future together.*



*Yours*

**Rtn AKS Dr. K. Srinivasan**

Media Publicity Officer (2024 - 25)

**Rotary Tiruchirappalli,**
**RID 3000 Zone-5.**

Edited by Rtn. **SL. Setumadava** (**94424 71867**) and published by
**District Secretary Administration Rtn. K. Ramesh Babu** (99941 02580),
for private circulation among members only. Printed by **Sree Vinayaga Screens**, Madurai.
**District Governor Secretariate Address : 169/1, 2nd Cross Street, 1st Main Road, Gomathipuram, Madurai - 625 020.**